TNKR080008052024

**சார்பு நீதிமன்றம், குளித்தலை**

**முன்னிலை :– திரு.ஈ.முத்துசாமி, பி.ஏ., பி.எல்.,**

**சார்பு நீதிபதி, குளித்தலை**

**2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 27–ம் நாள் வெள்ளிக்கிழமை**

**அசல் வழக்கு எண்.233/2024**

**CNR NO.TNKR08–000805–2024**

ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா, கிருஷ்ணராயபுரம் கிளை
அதன் பிரதிநிதியான அதன் கிளை மேலாளர் மூலமாக ... வாதி

.... எதிர் .....

K.துரை காமாட்சி ... பிரதிவாதி

**தீர்ப்புரை**

வாதியின் வங்கியிடமிருந்து பிரதிவாதி பெற்ற கடன் மற்றும் வட்டி தொகையான ரூ.1,33,000/–ஐ 11.80% பின்வட்டியுடன் செலுத்த உத்தரவிடக் கோரி வாதி வங்கியால் வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| வழக்கு தாக்கல் செய்யப்பட்ட நாள் | : | 11.11.2024 |
| இறுதி விசாரணை நடைபெற்ற நாள் | : | 25.03.2026 |
| தீர்ப்புரை பகரப்பட்ட நாள் | : | 27.03.2026 |
| வாதிக்காக | : | திரு.K.ஷேக் அன்வர்தீன் – வழக்கறிஞர் |
| பிரதிவாதி | : | நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரில்லை என்பதால் பிரதிவாதி தோன்றா தரப்பினராக கருதப்பட்டுள்ளார். |

1) **பிராதின் சுருக்கம் :–**

வாதியின் வங்கியிடம் பிரதிவாதியானவர் விவசாய வேலை செய்வதற்காக கடந்த 14.08.2020–ம் தேதி அன்று கடன் கேட்க, மேற்படி பிரதிவாதியின் ஆவணங்களை பரிசீலனை செய்து, பிரதிவாதிக்கு அன்றைய தினமே ரூ.1,60,000/–ம் கடனாக கொடுக்க, மேற்படி பிரதிவாதியானவர் ஆவணங்கள் பிறப்பித்துக்கொடுத்து கடன் தொகையை பெற்றுக்கொண்டு, மேற்படி தொகையை திரும்ப செலுத்தவில்லை. வாதியின் வங்கியிலிருந்து பிரதிவாதியை தொடர்பு கொண்டு பிரதிவாதி பெற்ற கடன் தொகையை திரும்ப செலுத்த கோரி கேட்க, மேற்படி பிரதிவாதி கடன் தொகையை திரும்ப செலுத்தவில்லை. எனவே, வாதியின் வங்கியிடம் இருந்து பிரதிவாதி பெற்ற கடன் மற்றும் வட்டி தொகையான ரூ.1,33,000/–ஐ 11.80% பின்வட்டியுடன் செலுத்த உத்தரவிடக்கோரி வாதியால் வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) பிரதிவாதியை நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரில்லை என்பதால் தோன்றா தரப்பினராக கருதப்பட்டுள்ளார்.

3) வாதி வங்கி தரப்பில், வங்கியின் கிளை மேலாளர் சங்கர் என்பவர் வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.5 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

4) வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவருடைய வாதுரையில், வாதி அவரது வழக்கினை தகுந்த சாட்சி மற்றும் சான்றாவணங்கள் வாயிலாக நிரூபித்துள்ளதால், வாதி வங்கி கோரியுள்ள பரிகாரம் வாதி வங்கிக்கு கிடைக்கத்தக்கது என வாதிட்டார்.

5) **தீர்வு :–**

5 (1) வா.சா.1 அவரது முதல் விசாரணையில், வாதியின் வங்கியிடம் பிரதிவாதியானவர் விவசாய வேலை செய்வதற்காக கடந்த 14.08.2020–ம் தேதி அன்று கடன் கேட்க, மேற்படி பிரதிவாதியின் ஆவணங்களை பரிசீலனை செய்து, பிரதிவாதிக்கு அன்றைய தினமே ரூ.1,60,000/–ம் கடனாக கொடுக்க, மேற்படி

பிரதிவாதியானவர் ஆவணங்கள் பிறப்பித்துக்கொடுத்து கடன் தொகையை பெற்றுக்கொண்டு, மேற்படி தொகையை திரும்ப செலுத்தவில்லை என்றும், வாதியின் வங்கியிலிருந்து பிரதிவாதியை தொடர்பு கொண்டு பிரதிவாதி பெற்ற கடன் தொகையை திரும்ப செலுத்த கோரி கேட்க, மேற்படி பிரதிவாதி கடன் தொகையை திரும்ப செலுத்தவில்லை என்றும், எனவே, வாதியின் வங்கியிடம் இருந்து பிரதிவாதி பெற்ற கடன் மற்றும் வட்டி தொகையான ரூ.1,33,000/–ஐ 11.80% பின்வட்டியுடன் செலுத்த உத்தரவிடக்கோரி வாதியால் வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.

5 (2) வாதியின் வங்கியிடம் பிரதிவாதியானவர் ரூ.1,60,000/– கடன் வாங்கியுள்ளார் என்கிற சங்கதியையும், அதற்காக பிரதிவாதியானவர் ஆவணங்கள் பிறப்பித்துக்கொடுத்துள்ளார் என்கிற சங்கதியையும் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.5 வரையிலான ஆவணங்கள் வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது. பிரதிவாதி நீதிமன்றத்தில் ஆஜர் ஆகாதது அவருக்கு எதிரான அனுமானத்தை உருவாக்குகிறது. வாதியின் வங்கியிடம் பிரதிவாதியானவர் கடன் பெற்றுக்கொண்டு, ஆவணங்கள் பிறப்பித்துக் கொடுத்துள்ளார் என்கிற சங்கதியை வா.சா.1 வாய்மொழி சாட்சியத்தின் வாயிலாகவும், வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.5 வரையிலான ஆவணங்கள் வாயிலாகவும் வாதி நிரூபணம் செய்துள்ளதால், வாதி கோரிய பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என முடிவு செய்யப்படுகிறது.

**6) முடிவாக,**

**(அ)** வாதியின் வழக்கானது செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது.

**(ஆ)** பிரதிவாதியானவர் வாதியின் வங்கிக்கு செலுத்த வேண்டிய தாவா தொகை ரூ.1,33,000/–ம் மற்றும் அசல் கடன் தொகை ரூ.1,60,000/–க்கு தாவா தேதி முதல் தீர்ப்பு தேதி வரை 9% வருட வட்டியும், தீர்ப்பு தேதி முதல் தொகை வசூலாகும் காலம் வரையிலான காலத்திற்கு 6% வருட வட்டியும் செலுத்த வேண்டும் என்று தீர்ப்பளிக்கப்படுகிறது.

இத்தீர்ப்புரை, என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 27–ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

MUTHUSAMY ESWARAN
Digitally signed by MUTHUSAMY ESWARAN
Date: 2026.03.27 17:04:06 +0530

சார்பு நீதிபதி,
குளித்தலை.

**வாதி தரப்பு சாட்சி :–**

வா.சா.1 – சங்கர் (வாதி வங்கியின் கிளை உதவி மேலாளர்)

**வாதி தரப்பு சான்றாவணங்கள் :–**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 14.08.2020 | கடன் விண்ணப்பம் |
| வா.சா.ஆ.2 | 12.11.2020 | கொதவை ஒப்பந்தம் |
| வா.சா.ஆ.3 | 12.11.2020 | ஒப்பந்த கடிதம் |
| வா.சா.ஆ.4 | 10.08.2023 | ரிவைவல் லெட்டர் |
| வா.சா.ஆ.5 | 16.02.2024 | கடன் கணக்கு பட்டியல் |

**பிரதிவாதி தரப்பு சாட்சிகள் :–** இல்லை

**பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள் :–** இல்லை

MUTHUSAMY ESWARAN
Digitally signed by MUTHUSAMY ESWARAN
Date: 2026.03.27 17:04:10 +0530

சார்பு நீதிபதி,
குளித்தலை.